புகழேந்தி புலவர் அரசு மேல்நிலைப்பள்ளி

பொன்விளைந்த களத்தூர்

ஒன்பதாம் வகுப்பு

குறுவினாக்கள்

1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தை சேர்ந்தது?
2. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக
3. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
4. கணினி சார்ந்த நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ் சொற்களை தருக
5. அகமாய் புறமாய் இலக்கியங்கள் அவை அமைந்ததை சொல்லும் இலக்கணங்கள் இலக்கியங்களின் பாடு பொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?
6. செய்வினை செய்யப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக
7. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையை சுட்டுக
8. கூவல் என்று அழைக்கப்படுவது எது?
9. உங்களது பள்ளியை சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களை குறிப்பிடுக
10. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக
11. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்கு பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
12. மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண் -இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?
13. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
14. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும் ஏன்?
15. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களை குறிப்பிடுக
16. பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் - இடம் சுட்டிப் பொருள் விளக்குக
17. பட்டிமண்டபம் பட்டிமன்றம் இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக
18. ஏறுதழுவுதல் குறித்து தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களை பட்டியலிடுக
19. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
20. தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும் - இக்குறட்பாவின் கருத்தை விளக்குக
21. ஒற்றொற்றி தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல் - இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக
22. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?
23. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக

24. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்திணை குறிப்பிடுக
25. மூன்று அறிவதுவே அவற்றோடு மூக்கே
 நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே ஐந்து அறிவதுவே அவற்றோடு செவியே - இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு நான்கறிவு ஐந்தறிவு உயிர்கள் யாவை?
26. செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியை பற்றி திரு சிவன் கூறுவது யாது?
27. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
28. மூவாது மூத்தவர் நூல் வல்லார் - தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக
29. நீங்கள் மிகவும் விரும்பி படித்த நூல்கள் யாவை?
30. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
31. செப்புத் திருமேனிகள் பற்றி குறிப்பு வரைக
32. நடுகல் என்றால் என்ன?
33. இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
34. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
35. இடி குரல், பெருங்கடல் - இலக்கண குறிப்பு தருக
36. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?
37. இறக்கும் வரை உள்ள நோய் எது?
38. அன்பு நான் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கி எழுதுக.
39. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?
40. காணாதான் காட்டுவான் தான் காணான்ஆயின் காணாதான் கண்டானாம் தான் கண்டவாறு - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள தொடை நயத்தை எழுதுக
41. இந்திய தேசிய ராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?
42. தாய் நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்ப பணியை தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?
43. மதுரை காஞ்சி -பெயர்க்காரணத்தை குறிப்பிடுக.
44. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தை காணும் பொருட்களையும் ஒப்பிட்டு எழுதுக
45. கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
46. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய விழ இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?
47. “டெல்லி நோக்கி செல்லுங்கள்” என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?
48. பகுத்தறிவு என்றால் என்ன?
49. தாவோ தே ஜிங் ‘இன்னொரு பக்கம்’ என்று எதைக் குறிப்பிடுகின்றது?
50. கமுகு மரம் எதை தேடியது?
51. யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்!
52. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
53. தமிழ் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோருக்கும் உள்ள வேறுபாடு யாது?
54. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் -இவ்வடியில் உள்ள இலக்கணக்குறிப்புகளை கண்டறிக
55. குறுந்தொகை - பெயர்க்காரணம் எழுதுக

www.Padasalai.Net

56. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தை கண்டறிக.
57. திராவிடம் என்ற சொல்லைக் குறித்து ஈராஸ் பாதிரியார் கூறுவது யாது?
58. தமிழ் மொழியைப் பற்றி கால்டுவெல் கூறுவது யாது?
59. தமிழை ஆட்சி மொழியாக கொண்ட நாடுகள் யாவை?
60. எந்தெந்த நாடுகளின் பணத்தாள்களில் தமிழ் மொழி இடம் பெற்றுள்ளது?

www.Padasalai.Net